# சென்றல் இன்வெஸ்மன்ட் அன்ட் பினான்ஸ் பிஎல்சி மற்றும் த ஸ்டான்டட் கிறடிற் பினான்ஸ் லிமிடெட் வைப்பாளர்களுக்கான இறுதி அறிவித்தல்

2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் 37ஆம் பிரிவின் நியதிகளுக்கமைய நிதி வியாபாரத்தினை மேற்கொள்வதற்காக சென்றல் இன்வெஸ்மன்ட் அன்ட் பினான்ஸ் பிஎல்சி (சிஐஎவ்எல்) மற்றும் த ஸ்டான்டட் கிறடிற் பினான்ஸ் லிமிடெட் (ரிஎஸ்சிஎவ்எல்) என்பனவற்றுக்கு வழங்கப்பட்ட உரிமங்கள் முறையே 2018.03.05 மற்றும் 2018.07.25ஆம் திகதிகளில் இரத்துச்செய்யப்பட்டுள்ளன. அதற்கமைய, இலங்கை மத்திய வங்கியானது இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய சென்றல் இன்வெஸ்மன்ட் அன்ட் பினான்ஸ் பிஎல்சியினதும் த ஸ்டான்டட் கிறடிற் அன்ட் பினான்ஸ் லிமிடெட்டினதும் வைப்பாளர்களுக்கு நட்டஈட்டினைக் கொடுப்பனவு செய்வதற்கு ஏற்கனவே நடவடிக்கைகளை எடுத்துள்ளது. எனினும், சென்றல் இன்வெஸ்மன்ட் அன்ட் பினான்ஸ் பிஎல்சி மற்றும் த ஸ்டான்டட் கிறடிற் அன்ட் பினான்ஸ் லிமிடெட்டின் சில வைப்பாளர்கள் இலங்கை மத்திய வங்கிக்கு தமது கோரல் படிவங்களை இதுவரையில் சமர்ப்பிக்கவில்லை.

நட்டஈட்டினைக் கொடுப்பனவு செய்வதற்கான அறிவுறுத்தல்களில் தரப்பட்டவாறு வேண்டப்படும் ஆவணங்களுடன் சேர்த்து கீழே குறித்துரைக்கப்பட்டவாறு முறையாகப் பூரணப்படுத்தப்பட்ட கோரல் படிவங்களை சமர்ப்பிக்குமாறு இது வரையில் தமது கோரல் படிவங்களைச் சமர்ப்பிக்காத அனைத்து வைப்பாளர்களும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். மேலும், இணைந்த வைப்பாளர்கள் வெவ்வாறான கோரல் படிவங்களை சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். வைப்பாளர்களுக்கான நட்டஈட்டுக் கொடுப்பனவுகள், இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை ஊடாக மாத்திரம் குறித்துரைக்கப்பட்ட வங்கிக் கணக்குகளுக்கு நேரடியாக வரவு வைக்கப்படும்.

கோரல் படிவம் www.cbsl.gov.lk என்ற மத்திய வங்கியின் வெப்தளத்தில் கிடைக்கப்பெறுவதுடன் அவற்றின் பிரதிகளை இலங்கை மத்திய வங்கியின் தலைமை அலுவலகத்திலும் மாத்தளை, மாத்தறை, அநுராதபுரம், திருகோணமலை, நுவரெலியா மற்றும் கிளிநொச்சி ஆகிய இடங்களிலுள்ள இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அலுவலகங்களிலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம். முறையாகப் பூரணப்படுத்தப்பட்ட கோரல் படிவங்கள் தேவையான ஆவணங்களுடன் **2020.01.17ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர்** இலங்கை மத்திய வங்கியின் அஞ்சல் அறையில் நேரடியாக கையளிக்கப்பட வேண்டும் அல்லது பின்வரும் முகவரிக்கு **பதிவுத்தபால் மூலம்** அனுப்பப்பட வேண்டும். தயவுசெய்து கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "சென்றல் இன்வெஸ்மன்ட் அன்ட் பினான்ஸ் பிஎல்சி" அல்லது "த ஸ்டான்டட் கிறடிற் அன்ட் பினான்ஸ் லிமிடெட்" என ஏற்புடையவிதத்தில் குறிப்பிடவும். மேலதிக விபரங்களை கீழே தரப்பட்டுள்ள தொலைபேசி இலக்கங்களினூடாக இலங்கை மத்திய வங்கியின் தலைமை அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

**பணிப்பாளர்**
**தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களம்**
**இலங்கை மத்திய வங்கி**
**இல. 30 சனாதிபதி மாவத்தை**
**கொழும்பு 01**

**மேலதிக விபரங்களுக்கு:**
**011 - 2477261 அல்லது**
**சிஐஎவ்எல் 011 - 2477058**
**ரிஎஸ்சிஎவ்எல் 011 - 2477550**

........................................................................... (கம்பனியின் பெயர்)

அலுவலக அடையாள இல:
(அலுவலக உபயோத்திற்கு மாத்திரம்)

## பிரகடனத்துடன்கூடிய கோரல் படிவம்
## இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டம்

ஒவ்வொரு வைப்பாளரும் இணைந்த கணக்குகளின் விபரங்கள் உள்ளடங்கலாக கோரல் படிவங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். அத்தகைய இணைந்த கணக்குகளை வைத்திருப்போர் தனித்தனியாக படிவங்களை சமர்ப்பிக்க வேண்டும். இப்படிவத்தினைப் பூர்த்திசெய்வதற்கு தயவுசெய்து கீழே தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பார்க்கவும்.

1. வைப்பாளரின் விபரங்கள்

1.1. முழுப்பெயர்:

1.2. அடையாள எண்கள்: (அறிவுறுத்தல்கள் இல. (I) மற்றும் (IV(அ) மற்றும் (உ) இன் கீழே தரப்பட்டுள்ளது)

அ. தேசிய அடையாள அட்டை இல./ வியாபாரப் பதிவிலக்கம்:-

ஆ. கடவுச் சீட்டு இல:- ................................................. இ. சாரதி அனுமதிப்பத்திர இல. .................................................

1.3 தற்போதைய முகவரி:- .................................................

1.4 தொலைபேசி இல. நிலையானது .................................................செல்லிட .................................................

1.5 மின்னஞ்சல் முகவரி:- .................................................

2. நட்டஈட்டினை வழங்குவதற்கான வைப்பாளரின் வங்கிக் கணக்கு விபரங்கள்:- (அறிவுறுத்தல்கள் இல. IV(இ)இன் கீழ் தரப்பட்டுள்ளது)

2.1 கணக்கு வைத்திருப்பவரின் பெயர்:-

2.2 வங்கியின் பெயர்: .................................................2.3 வங்கி கணக்கு இல:- .................................................

2.4 கணக்கு பேணப்படுகின்ற கிளையின் பெயர்:- .................................................

3. 2018.03.05 அன்று உள்ளவாறு சென்றல் இன்வெஸ்மன்ட் அன்ட் பினான்ஸ் பிஎல்சி அல்லது 2018.07.25 அன்று உள்ளவாறு த ஸ்டான்டட் கிறடிற் அன்ட் பினான்ஸ் லிமிடெட் வைப்பு விபரங்கள் (ஒவ்வொரு வைப்புக்கும் தனித்தனியாக விபரங்கள் வழங்கப்படவேண்டும் என்பதுடன் மேலதிகத் தகவல்களுக்காக வேறு தாள்களை பயன்படுத்தவும்) (தயவுசெய்து அறிவுறுத்தல்கள் இல. (III, IV(ஆ) இன்கீழ் தரப்பட்டுள்ளவற்றை வாசிக்க)

| கணக்கு இலக்கம்/ வைப்புச் சான்றிதழ் இலக்கம | தொடர் இலக்கம் | வைப்பின் வகை சேமிப்பு/ நிலையான வைப்பு (தனியான/ இணைந்த) | வைப்புத் தொகை (ரூ.) |
|---|---|---|---|
| | | | |
| | | | |

4. 2018.03.05 அன்று உள்ளவாறு சென்றல் இன்வெஸ்மன்ட் அன்ட் பினான்ஸ் பிஎல்சிற்கு அல்லது 2018.07.25 அன்று உள்ளவாறு த ஸ்டான்டட் கிறடிற் அன்ட் பினான்ஸ் லிமிடெட்டிற்கு செலுத்தப்படவேண்டிய கடன்களின் விபரங்கள் (ஒவ்வொரு கடனுக்கும் தனித்தனியாக விபரங்கள் வழங்கப்படவேண்டும் என்பதுடன் மேலதிகத் தகவல்களுக்காக வேறு தாள்களை பயன்படுத்தவும்) (தயவுசெய்து அறிவுறுத்தல்கள் இல. (IV(ஈ) இன்கீழ் தரப்பட்டுள்ளவற்றை வாசிக்கவும்)

(i) வழங்கப்பட்ட கடன் தொகை ரூ.................................................(ii) வட்டி வீதம் .................................................%

(iii) கடன் காலம்: .................................................(iv) கடன் வழங்கப்பட்ட திகதி .................................................

(v) தவணைக் கொடுப்பனவுப் பெறுமதி ரூ.................................................(vi) கொடுப்பனவுக்கால இடைவெளி (மாதாந்தம்/ ஆண்டிற்கு இருமுறை, வருடாந்தம்)

(vii) இறுதிக் கொடுப்பனவுத் திகதி .................................................(viii) செலுத்தவிருக்கும் முதல்தொகை/ மூலதனம் ரூ.................................................

(ix) செலுத்தப்படாதிருக்கும் மொத்த நிலுவை ரூ.................................................(x) பிணையின் வகை.................................................

5. பிரகடனம் (தயவுசெய்வு அறிவுறுத்தல் II இன்கீழ் தரப்பட்டுள்ளவற்றை வாசிக்க):-

.................................................(உரிமைக் கோரலாளரின் முகவரி) ஐச் சேர்ந்த .................................................(கோரலாளரின் அல்லது சட்டரீதியான நன்மைபெறுநரின் பெயர்) ஆகிய நான், இக்கோரலானது, ................................................. (வைப்பாளரின் பெயர்) சார்பில் செய்யப்படுகின்றது என்றும், சொல்லப்பட்ட வைப்பின் எந்தவொரு பகுதியும் இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டத்தின் மூலம் முன்னர் கொடுப்பனவு செய்யப்படவில்லை என்றும், அதன் அல்லது அதில் ஏதேனும் பாகத்தின் புறக்குறிப்பீடோ அல்லது சாட்டுதலோ செய்யப்படவில்லை என்பதையும் மேலே எடுத்துரைக்கப்பட்டவாறு சொல்லப்பட்ட நிறுவனத்துடன் வேறு ஏதேனும் செலுத்தப்படாத கடன்களை நான் கொண்டிருக்கவில்லை என்றும் குறிப்பிடுகின்றேன்.

கோரலாளர் வைப்பு/ வைப்புக்கள் மீது இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவு திட்டத்தினால் மேற்கொள்ளப்படும் இழப்பீட்டுக் கொடுப்பனவின் பெறுகையின் மீது மூன்றாந்தரப்பினரொருவரினால் கோரப்படும் அல்லது உரிமை கோரப்படும் பொறுப்புக்கள், வட்டி, இழப்புக்கள், செலவுகள், கட்டணங்கள் என்பன உள்ளடங்கலாக, ஆயினும் இதற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படாத ஏதேனும் அல்லது அனைத்துக் கோரிக்கைகளுக்குமெதிராக இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டம், இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை மற்றும் அதன் எவரேனும் ஊழியர்கள், அலுவலர்கள், பிரதிநிதிகள் மற்றும் முகவர்களுக்கு நட்டோத்தரவாதம் அளிப்பதற்குத் தீங்கின்றி இருப்பதற்கு இத்தால் நான் இணங்குகிறேன்.

கோரலாளரின் கையொப்பம்:

.................................................

கோரலாளர் இங்கே பிரகடனப்படுத்தப்பட்டுள்ள உள்ளடக்கங்களை வாசித்து விளங்கிக்கொண்டு ................................. இல் ......................... திகதி ............. மாதம் 20.......... அன்று எனக்கு முன்னால் கையொப்பமிட்டிருக்கின்றார்.

கையொப்பம்:

.................................................

சத்தியப்பிரமாண ஆணையாளர்/ சமாதான நீதவான்

அலுவலக முத்திரை:.................................................முகவரி:.................................................திகதி:.................................................

### கோரல் படிவத்தை பூரணப்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள்

I. அனைத்து அடையாள விபரங்களும் பின்வருவனவற்றைப் பரிசீலனையில் கொண்டு பூரணப்படுத்தல் வேண்டும்.

அ) தனிப்பட்ட கணக்குகளைப் பொறுத்தவரையில் - தேசிய அடையாள அட்டை/ கடவுச்சீட்டு/ சாரதி அனுமதிப்பத்திர இலக்கம்;

ஆ) கூட்டுக் கணக்குகளாயின், ஒவ்வொரு கூட்டுக் கணக்கு வைத்திருப்பவரினதும் தேசிய அடையாள அட்டை/ கடவுச்சீட்டு/ சாரதி அனுமதிப்பத்திர இலக்கம்;

இ) பராயமடையாதோர் கணக்குகளாயின் - பாதுகாவலரின் அடையாள அட்டை/ கடவுச்சீட்டு/ சாரதி அனுமதிப்பத்திர இலக்கம் மற்றும் பராயமடையாதவரின் பிறப்புச் சான்றிதழ்;

ஈ) தனியுடமை, பதிவுசெய்யப்படாத கழகம், சங்கம், பங்குடமை அல்லது வேறு ஏதேனும் கூட்டிணைக்கப்படாத நிறுவனமாக இருப்பின் - அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பதாரர்களின்/பங்காளர்களின் அடையாள அட்டை/ கடவுச்சீட்டு/ சாரதி அனுமதிப்பத்திர இலக்கம்;

உ) கம்பனிச் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாக இருக்குமிடத்து படிவம் 20 (அதாவது பணிப்பாளர்/ செயலாளர் மாற்றம் அல்லது பணிப்பாளர்/ செயலாளரின் விபரங்கள்) மற்றும் கூட்டிணைப்புச் சான்றிதழ், கம்பனியின் நிலையில் ஏற்படும் மாற்றங்களின் அடிப்படையில் தேவைப்படுத்தக்கூடிய ஏனைய ஆவணங்கள் என்பன வழங்கப்பட வேண்டும்.

ஊ) மற்றைய பிரதேச/உள்ளூராட்சி மன்றங்களின் கீழ் பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்களாக இருக்குமிடத்து தொடர்பான அதிகாரசபையிடமிருந்தான பதிவுசெய்தல் சான்றிதழ்கள் வழங்கப்படல் வேண்டும்.

II. வைப்பாளர் அவரது சொந்த கோரல் படிவத்தை சமர்ப்பிப்பாராயின் (இணைந்த கணக்கு வைத்திருப்பவர்கள் உள்ளடங்களாக) தொடர்புடைய வைப்பாளர் கோரிக்கைப் படிவத்தின் பிரகடனப் படிவத்திலுள்ள வைப்பாளர் மற்றும் கோரலாளர் அல்லது சட்ட ரீதியான நன்மைபெறுநர் இரண்டின் கீழும் தனது பெயரைக் குறிப்பிட வேண்டும்.

III. நிலையான வைப்பு விடயத்தில், "வைப்புத் தொகை", இறுதி புதுப்பிக்கப்பட்ட வைப்புப் பெறுமதியாக அல்லது அவ்வாறு இல்லையாயின் நிலையான வைப்புச் சான்றிதழின் முகப்பெறுமதியாக இருக்க வேண்டும்.

IV. கோரல் படிவங்களுடன் பின்வரும் ஆவணங்கள் வழங்கப்படவேண்டும்.

அ) சென்றல் இன்வெஸ்மன்ட் அன்ட் பினான்ஸ் பிஎல்சி/ த ஸ்டான்டட் கிறடிற் அன்ட் பினான்ஸ் லிமிடெட் இல் வைப்புகளை ஆரம்பிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட அனைத்து தொடர்புடைய அடையாள ஆவணத்தின் சான்றுபடுத்தப்பட்ட பிரதிகள் (அடையாள ஆவணத்தின் பிரதிகள் சட்டத்தரணி/ பிரசித்த நொத்தாரிசு/ சத்தியப் பிரமாண ஆணையாளர்/ சமாதான நீதவான் மூலம் சான்றுபடுத்தப்பட வேண்டும்.

ஆ) கோரப்படும் தொகை ஆவணச் சான்றுகள் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். எனவே, கோரிக்கைப் படிவங்கள்,

- நிலையான வைப்புக்கள் விடயத்தில் - அனைத்து மூல நிலையான வைப்புச் சான்றிதழ்கள், பிந்திய மீள்புதுப்பிப்புக் கடிதங்கள்,
- சேமிப்புக் கணக்கு விடயத்தில் - அனைத்து மூல சேமிப்புப் புத்தகங்கள்,
- வைப்புச் சான்றிதழ் ஏதேனும் இருப்பின் அது தொடர்பில் - அனைத்து மூல வைப்புச் சான்றிதழ்கள் மூலம் துணையளிக்கப்பட வேண்டும்.

இ) வைப்பாளரின் வங்கிக் கணக்கு விபரங்கள் -

- சேமிப்புக் கணக்கு விடயத்தில் கணக்கு வைத்திருப்பவரின் விடயங்களை உள்ளடக்குகின்ற சேமிப்புப் புத்தகத்தின் முதல் பக்கத்தில் பிரதி,
- நடைமுறைக் கணக்கு விடயத்தில் பிந்திய கணக்குக் கூற்று

மூலம் துணையளிக்கப்பட வேண்டும்.

ஈ) சென்றல் இன்வெஸ்மன்ட் அன்ட் பினான்ஸ் பிஎல்சி மற்றும் த ஸ்டான்டட் கிறடிற் அன்ட் பினான்ஸ் லிமிடெட்டிற்கு வைப்பாளரினால் செலுத்தத்தக்க கடன்கள்/ கடனட்டை மற்றும் ஏதேனும் வேறு தொகை விடயத்தில் - அத்தகைய நிலுவைப் பொறுப்புகளை உறுதிப்படுத்துவதற்கு கிடைக்கத்தக்க பிந்திய கூற்றுகள்.

உ) வைப்பாளரது பெயர் அல்லது அடையாள இலக்கம் சென்றல் இன்வெஸ்மன்ட் அன்ட் பினான்ஸ் பிஎல்சி மற்றும் த ஸ்டான்டட் கிறடிற் அன்ட் பினான்ஸ் லிமிடெட் வைப்புச் சான்றிதழ்/ சேமிப்புப் புத்தகம் மற்றும் கணக்கினை ஆரம்பிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட அடையாள ஆவணங்களின் (தேசிய அடையாள அட்டை, கடவுச்சீட்டு, சாரதி அனுமதிப்பத்திரம்) இருந்து வேறுபடுமாயின் அத்தகைய வேறுபாடுகளுக்கான காரணத்தை குறிப்பிட்டு சத்தியப்பிரமாண ஆணையாளரினால்/ சமாதான நீதவானால் சான்றுபடுத்தப்பட்டு சட்ட ரீதியாக செல்லுபடியான சத்தியக்கூற்றொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

இலங்கை மத்திய வங்கி
இல. 30 சனாதிபதி மாவத்தை
கொழும்பு 01